# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று திருப்பூர், மேட்டுப்பாளையத்தில் உரையாற்றுகிறார் !

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஆறாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 17-ஆம் தேதி ஆண்டிப்பட்டியில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று திருப்பூர், மேட்டுப்பாளையத்தில் உரையாற்றுகிறார்.



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **18.04.2026 (சனிக் கிழமை)** | | |
| மாலை 5 மணி | திருப்பூர் (பொதுக்கூட்டம்) | திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, பல்லடம், அவினாசி, தாராபுரம், காங்கேயம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் |
| மாலை 7 மணி | மேட்டுப்பாளையம் (பொதுக்கூட்டம்) | மேட்டுப்பாளையம், உதகமண்டலம், கூடலூர், குன்னூர், கவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர் |
| **19.04.2026 (ஞாயிற்றுக் கிழமை)** | | |
| மாலை 4 மணி | ஒசூர் (பொதுக்கூட்டம்) | ஒசூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர், வேப்பனஹள்ளி, தளி |

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 14.04.2026

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

---



## தி.மு.க. இளைஞர் அணி

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர் மாவட்டங்களில் அவர் இன்று (18.4.2026) மேற்கொள்ளவுள்ள பரப்புரை சுற்றுப்பயண விவரம் வருமாறு:

**18.4.2026 சனிக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | கோபிசெட்டிபாளையம் | குன்னத்தூர் சாலை, பாலமாரியம்மன் கோயில் அருகில், கோபிசெட்டிபாளையம். |
| காலை 10.30 மணி | மொடக்குறிச்சி | காங்கேயம் சாலை, அவல்பூந்துறை. |
| மாலை 3.30 மணி | திருச்செங்கோடு | அண்ணாசிலை அருகில், திருச்செங்கோடு. |
| மாலை 4.30 மணி | சங்ககிரி | எடப்பாடி பிரிவு சாலை, சங்ககிரி. |
| மாலை 5.30 மணி | வீரபாண்டி | சந்தைத் திடல், பனமரத்துப்பட்டி. |
| மாலை 6.30 மணி | இராசிபுரம் | பேருந்து நிலையம் அருகில், இராசிபுரம். |
| இரவு 7.30 மணி | கரூர் | பேருந்து நிலையம் ரவுண்டானா, கரூர். |
| இரவு 8.30 மணி | கிருஷ்ணராயபுரம் | கடைவீதி, கிருஷ்ணராயபுரம். |

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 17.4.2026

கலைஞர் 100 1924 - 2023



---

திருச்சி காந்தி மார்க்கெட்டில்

## அமைச்சர்கள் கே.என்.நேரு - அன்பில் மகேஸ் பொய்யாமொழி தேர்தல் பிரச்சாரம்!



திருச்சி, ஏப். 18 -

திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் முனைவர் இனிகோ இருதயராஜ் அவர்களை ஆதரித்து, தமிழக அமைச்சர்கள் காந்தி மார்க்கெட் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

**நடைபயண வாக்கு சேகரிப்பு**

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் மேற்குத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் கே.என்.நேரு மற்றும் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான திருவெறும்பூர் தொகுதி கழக வேட்பாளர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் காந்தி மார்க்கெட் பகுதியில் காலை முதலே நடைபயணமாகச் சென்று வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தனர்.

**முக்கிய வாக்குறுதி**

பிரச்சாரத்தின் போது வியாபாரிகளிடையே பேசிய அமைச்சர்கள், கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறினர். குறிப்பாக: காந்தி மார்க்கெட் இடமாற்றம் செய்யப்படாது:

"கழக ஆட்சியில் காந்தி மார்க்கெட் இங்கிருந்து மாற்றப்படாது, இதே இடத்திலேயே தொடர்ந்து செயல்படும்" என உறுதி அளித்தனர்.

**வணிக பாதுகாப்பு:**

"உங்கள் வியாபாரம் பாதுகாக்கப்படும், உங்களுக்கு நாங்கள் எப்போதும் உறுதுணையாக இருப்போம்" எனக்கூறி உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கோரினர்.

பங்கேற்ற நிர்வாகிகள்

இந்த நிகழ்வில் பின்வரும் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்:

மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன் தொகுதி பார்வையாளர் கதிரவன்

பகுதி கழகச் செயலாளர்கள் பாபு, மோகன், டிபிஎஸ் எஸ் ராஜ்குமார், மணிவேல்,

காந்தி மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் கழக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

---



பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஜி.கே.எம்.தமிழ்குமரனை ஆதரித்து காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை ஏரியூரில் பொதுமக்களிடையே பரப்புரை மேற்கொண்டு வாக்கு சேகரித்தார். உடன் காங்கிரஸ் மாவட்ட தலைவர் சிற்றரசு, திமுக தொகுதி பார்வையாளர் பாரி, ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஆர்.சி.செல்வராஜ் மற்றும் கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர்.